DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
TIRUVARUR.

**CC. No.378/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | **PW 1 (LW 1 )** | Caste | : | |
| Name | : | பாண்டியன் | Age | : | 39/2026 |
| Father's Name | : | தனிக்கொடி | Occupation | : | டிரைவர் |
| Village | : | மாவூர் | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the **22nd day of July 2026.**

சாட்சியை திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய நீதிமன்ற தலைமை காவலர் திரு. எஸ். சுதாகர் அடையாளம் காட்டினார்.

**( A1, A2 present.)**

**முதல் விசாரணை** :

நான் தற்போது மாவூரில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். 2023 ம் வருடம் 8 வது மாதம் தேதி ஞாபகம் இல்லை. இரவு 10.00 மணியளவில் நான் எனது வீட்டு வாசலில் நின்றுக்கொண்டிருந்தேன். தெருவில் ஒரே கூட்டமாக சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது கூட்டத்தில் இருந்த ஒரு நபர் என்னை பிடித்து கீழே தள்ளிவிட்டார். யார் என்று எனக்கு தெரியாது. கூட்டத்தில் எதிரிகள் இருந்ததால் சந்தேகத்தின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக போலிசாரிடம் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி அளிக்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை** :

23.08.2023 ம் தேதி இரவு 10.00 மணியளவில் மாவூர் மேலத்தெருவில் உள்ள எனது வீட்டு வாசலில் நின்றுக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். என்னிடம் எதிரிகள் இரவலாக இருசக்கர வாகனம் கேட்டார்கள் என்றால் சரியல்ல. நான் அதற்கு தரமுடியாது என்றேன் என்றால் சரியல்ல. அதனால் எதிரிகள் என்னை எதிரிகள்

அசிங்கமான வார்த்தையால் பேசி, கையால் அடித்து , கொலை மிரட்டல் விடுத்தனர் என்றால் சரியல்ல. எதிரிகளுடன் நான் சமாதானம் ஆகிவிட்டேன் என்றால் சரிதான். சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரிகளுடன் சமாதானமாகி சமாதான மனு தாக்கல் செய்து எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை.

**மறு விசாரணை :** இல்லை.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.**

**ஒம்/- G. லிசி.,**
**நீதித்துறை நடுவர்,**
**திருவாரூர்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
TIRUVARUR.

**CC. No.378/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | **PW 2 (LW 6 )** | Caste | : | |
| Name | : | திரு. ஞானசேகரன் | Age | : | 45/2026 |
| Father's Name | : | பிச்சைமுத்து | Occupation | : | தலைமை காவலர் |
| Village | : | நகர காவல் நிலையம், திருவாரூர் | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the **22nd day of July 2026.**

சாட்சியை திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய நீதிமன்ற தலைமை காவலர் திரு. எஸ். சுதாகர் அடையாளம் காட்டினார்.

**( A1, A2 present.)**

**முதல் விசாரணை** :

நான் கடந்த 24.09.2023 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய மனு எண்.660/2023 என பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு 27.09.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு நிலைய குற்ற எண். 551/2023 சட்டப்பிரிவுகள் 294(பி), 352, 506(2) இ.த.ச. -வின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அ.சா.1 கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். என்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவ இடம் செல்லாமலும், வழக்கு கோப்பினை சரிவர விசாரணை செய்யாமல் வழக்குக்கான தேவையான ஆவணங்களை காவல் நிலையத்திலேயே வைத்து தயார் செய்தேன் என்றும், எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.

ஒம்/- G. லிசி.,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
TIRUVARUR.

**CC. No.378/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | **PW 3** கூடுதல் சாட்சி | Caste | : | |
| Name | : | திரு. கிருஷ்ணகுமார் | Age | : | 55/2026 |
| Father's Name | : | முனுசாமி | Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Village | : | தாலுக்கா காவல் நிலையம், திருவாரூர் | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the **22nd day of July 2026.**

சாட்சியை திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய நீதிமன்ற தலைமை காவலர் திரு. எஸ். சுதாகர் அடையாளம் காட்டினார்.

**( A1, A2 present.)**

**முதல் விசாரணை** :

நான் தற்போது திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறனே். இவ்வழக்கில் விசாரணை அதிகாரி ராஜகோபால் அவர்களை தெரியும். அவருடைய கையெழுத்து மற்றும் கையொப்பத்தை நான்அறிவேன். இவ்வழக்கின் முக்கிய சாட்சிகள்அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளதாலும், விரைவு விசாரணை, வழக்கின் காலதாமதம் மற்றும் நீதியின் நலன் கருதி சட்டப்பிரிவு 311 கு.வி.மு.ச. மற்றும் சட்டப்பிரிவு 348 BNSS -ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு ஆட்சேபனை இல்லை என கூறப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நான் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியமளிக்கிறேன்.

உதவி ஆய்வாளர் ராஜகோபால் 24.09.2023 ம் தேதி திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது குற்ற எண். 505/2023 வழக்கினை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 27.08.2023 ம் தேதி காலை 11.00 மணிக்கு சம்பவ இடம்சென்று சாட்சிகளை விசாரித்து பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ. 5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரியவரவே இவ்வழக்கின் எதிரிகளை தேடிய

நிலையில் எதிரி இளங்கோவனை கைது செய்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தியுள்ளார். மற்றொரு எதிரி முன்ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார். இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

அ.சா.1 கொடுத்த புகாரினை சரிவர விசாரணை செய்யாமலும், நான் சொல்வது போல் சொன்ன இடத்திற்கு சொன்ன நேரத்திற்கு செல்லாமல் வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு, சரிவர புலன்விசாரணை செய்யாமல் வழக்கின் எதிரிகள் மீது பொய்யான வழக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.**

**ஒம்/- G. லிசி.,**
**நீதித்துறை நடுவர்,**
**திருவாரூர்.**